சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

மு.வ.எண்.6/2016

2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 20ம் நாள் DW1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.தி.கணேஷ், பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் திருமதி. மல்லிகா நாள்.20.11.2025
க /பெ. சங்கர நாராயணன்

வயது. 75 வட்டம்

கிராமம். செவ்வாய்பேட்டை, சேலம் மாவட்டம்.

<u>பிரதிவாதிகள் 2, 4, 10 முதல் 12 தரப்பு சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்</u>

1. நான் வழக்கில் 4ம் பிரதிவாதி. நான் எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் எழுதப்பட்டது. அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். 19.03.1998 தேதியில் சீனிவாசன் மற்றும் பலர் சேர்ந்து தமிழரசிக்கு எழுதிக் கொடுத்த கிரய ஆவணத்தின் சார்பதிவு நகல் பி.த.சா.ஆ.1. 04.01.1999 தேதியில் சீனிவாசன் மற்றும் பலர் சேர்ந்து காந்திக்கு எழுதிக் கொடுத்த கிரய ஆவணத்தின் சார்பதிவு நகல் பி.த.சா.ஆ.2. 04.03.2002 தேதியில் சீனிவாசன் ராமசாமிக்கு எழுதிக் கொடுத்த கிரய ஆவணத்தின் சார்பதிவு நகல் பி.த.சா.ஆ.3. என் பெயரில் உள்ள கணினி பட்டா நகல் பி.த.சா.ஆ.4. 26.10.2006 தேதியில் எனக்கு சங்கர் மற்றும் பலர் எழுதிக் கொடுத்த கிரய ஆவணத்தின் சார்பதிவு நகல் பி.த.சா.ஆ.5(மேற்கண்ட ஆவணத்தின் அசல் தாக்கல் செய்யவில்லை என்பதால் வாதிகள் தரப்பில் குறியீடு செய்ய ஆட்சேபனை செய்யப்பட்டு, ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்பட்டுகிறது). மு.வ.65/2010 வழக்கின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல்கள் பி.த.சா.ஆ.6 மற்றும் 7. தாவாவை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

(வாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது)